சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.11.2025
வா.சா.1 – கருப்பையா S/o. வெள்ளப்பிச்சன்
O.S. No.170/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் இதே நீதிமன்றத்தில் AS 161/2003 என்ற மேல்முறையீட்டு வழக்கை பொறுத்து எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தோன்றாதரப்பினர் உத்தரவை ரத்து செய்யவேண்டி மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் நான் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். மேற்படி தோன்றாதரப்பினர் உத்தரவை நீக்கறவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனு மேல்நடத்தப்படாமல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவானது வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாமல் அறுவைசிகிச்சைக்காக சென்னை சென்றுவிட்டார் அதனால் அது மேல்நடத்தால் தள்ளுபடியானது. AS 161/2003 என்ற மேல்முறையீட்டு வழக்கில் கண்ட சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்டி ஆக்கிரமிப்பு செய்ததாக எங்கள் மீது EP 6/2011, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர் முன்பாக தாக்கல் செய்யப்பட்டு எங்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் சரிதான். 5 நாட்கள் நான் கைது செய்யப்பட்டு, அதன்பிறகு நான் நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி AS 161/2003 பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்போவதாக கூறினோம் என்றும், அதனால் நிறைவேற்று மனுவில் விலக்களிக்கவேண்டும் என்று நாங்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தோம் என்றால் சரிதான். நான் கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில் நிறைவேற்று மனுவானது நிறுத்திவைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நான் எழுதி நீதிமன்றத்திற்கு கொடுத்த உத்தரவாதத்தின்

அடிப்படையில் தான் நிறைவேற்று மனுவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு முச்சலிகா ஒன்று எழுதி கொடுத்துள்ளேன் என்றும் சாட்சியிடம் மேற்படி முச்சலிகா காட்டப்பட்டு அதில் உள்ள கருப்பையா என்ற கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புகொள்கிறார். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல்முறையீடு, கீழமை நீதிமன்றத்தில் ஏற்கனவே நடந்த வழக்குகளை எல்லாம் மறைத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் வீட்டுவரிரசீதுகள் மற்றும் அனுபவ பாத்தியத்திற்குரிய ஆவணங்கள் உள்ளன. வீட்டுவரிரசீதுகளை எல்லாம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.32 பட்டா எப்போது, யாரால் வழங்கப்பட்டது என்றால் புறம்போக்கு இடத்தை அனுபவத்தில் யார் இருக்கிறார்களோ அவரவர்கள் பெயரில் பட்டா அப்போது வழங்கினார்கள். அதன்படி 4-1/2 ஏக்கரில் 55 செண்டு 20 ஏர்ஸ்க்கு அனுபவத்தை வைத்து எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதற்குமுன்பாக 1ம் பிரதிவாதி பிச்சம்மாளின் தகப்பனார் அவையன் பெயரில் பட்டா இருந்ததா என்றால் அவையனுக்கு மொத்தம் 2 ஏக்கர் , அதில் 1 ஏக்கரை அவர் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து பட்டா இருக்கிறது. வழக்கு சொத்திற்கான பட்டா அனுபவத்தை பொறுத்து என் பெயரில் தான் உள்ளது. 4-1/2 ஏக்கர் நிலம் 1ம் பிரதிவாதி பிச்சம்மாளின் தகப்பனார் அவையனுக்கு காலிமனையாக 1970ம் ஆண்டு 4ம்மாதம், நிபந்தனை ஜாரியாக சிறப்பு தாசில்தார், மேலூர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.313, கொடுக்கப்பட்டி கிராமத்திற்குரியது வழங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் UDR நிலவரி திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறுகளின் அடிப்படையில் சர்வே எண்.313/1 அவையன் பெயரில் உள்ள பட்டா தவறுதலாக விசாரணையில்லாமல்

என்னுடைய பெயரில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ஆகவே எனக்கு வழங்கப்பட்ட தவறான UDR பட்டா அடிப்படையில் எனக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாத காரணத்திற்காகவும் ஏற்கனவே வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாலும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.11 21:40:57 +0530

Sub Judge
Melur